ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூர் தெற்கு பகுதி 164, 166, 167 ஆகிய வட்டங்களில் தோழமைக் கட்சி நிர்வாகிகள், தோழர்களுடன் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தா.மோ.அன்பரசன் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். அருகில் மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், பொதுக் குழு உறுப்பினர் எம்.எஸ்.கே.இப்ராகிம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் உலகநாதன், ஏசுதாஸ், நடராஜன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதிக்குட்பட்ட செங்குன்றம் பேரூர் பகுதியில் பொதுமக்களின் பெரும் ஆதரவோடு பரப்புரையை வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் மேற்கொண்டார். இந்நிகழ்வில் செங்குன்றம் பேரூர் பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

குன்னம் தொகுதியில் - நாளை

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பரப்புரை!

அரியலூர் மாவட்டக் கழகத்தினருக்கு – அமைச்சர் சா.சி.சிவசங்கர் வேண்டுகோள்!

அரியலூர், ஏப்.15-

அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில், ஒன்றிய, நகர மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் ஆலோ சனைக் கூட்டம் தமிழ்நாடு அரசு போக்குவ ரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச் சர், மாவட்ட கழக செய லாளர் சா.சி.சிவசங்கர் தலை மையில் நடைபெற் றது.

ந டை பெ ற் ற கூட்டத்தில் அரியலூர் மாவட்ட கழக செயலா ளர், அமைச்சர் சா.சி.சிவ சங்கர் நாளை (16 ஆம் தேதி),கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் குன்னம் தொகுதிக்கு உட் பட்ட ஒதியம் பிரிவில் பெரம்பலூர், குன்னம், அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் சட்ட மன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து மாபெரும் தேர் தல் பரப்புரை மேற் கொள்ள உள்ளார்.

அதுசமயம் கழக நிர்வா கிகள் பெருமளவில் கலந்து கொள்ள வேண்டும், தொடரந்து அரியலூர், ஜெயங் கொண்டம், குன் னம் உள்ளிட்ட சட்ட மன்ற தொகுதியில் நடை பெற்று வரும் தீவிரமான தேர்தல் களப்பணிகள் குறித்து மாவட்ட, ஒன் றிய, நகர கழக நிர்வாகிகளுடன் ஆலோச னைகள் வழங்கினார். தொடர்ந்து பேசுகையில் மக்களின் நலன் ஒன் றையே முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு உழைக்கும் நமது கழகத் தலைவர் தளபதி மு.க ஸ்டாலின் அவர்களின் கரங்களை வலுப்படுத்தி, மக்கள் பணியைத் தொடர்ந்து சோர்வின்றி முன்னெடுத்து, திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைக்க அனைவரும் ஒன்றாக உழைப்போம்.

நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் களை இரண்டாவது முறையாக மீண்டும் அரிய

ணையில் அமர்த்த அனை வரும் ஒருங்கிணைந்து சோர்வின்றி உழைப் போம்! என கூறினார்.

இக்கூட்டத்தில் குன் னம் சட்டமன்ற தொகுதி மேற் பார் வை யா ள ர் ஏ.கே.அருண், ஜெயங் கொண்டம் அரியலூர் சட் டமன்ற தொகுதி மேற் பார் வை யா ள ர் ப.அன்பரசு, ஜெயங் கொண்டம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையா ளர் கன்னிகை ஸ்டாலின் மாவட்ட துணை செயலா ளர் சி.சந்திரசேகரன், ஒன் றிய கழக பொறுப்பாளர் கள் இரா. கென்னடி, பூ. செல்வராஜ், இரா.மணிமா றன், மா. அ ன் ப ழ க ன், கோ.அறி வழகன், ஆர். கலிய பெருமாள், வி.எழில் மாறன், இரா.அண்ணா துரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், கே.ஜி.எஸ். முருகன், இரா.செந்தில்கு மார், நகர கழக செயலா ளர்கள் இரா.முருகேசன், வெ. கொ. கருணாநிதி, பேரூர் கழக செயலாளர் கள். ப.கோபால கிருஷ் ணன் அ.அல்போன்ஸ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே. சி.லூயிகதிரவன், மற்றும் மாவட்ட,, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்ட னர்.

தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. –

மருத்துவர் ஆர்.எஸ்.கிருத்திகா தேவிக்கு வாக்கு சேகரிப்பு!

டி.காமராஜ் - ஜி.கே.ரவி அறிக்கை!

தாம்பரம்,ஏப்.15-

தாம்பரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார் பில் போட்டியிடும் மருத்து வர் ஆர் எஸ் கிருத்திகா தேவி அவர்கள் இன்று (15.04.2026 புதன்கிழமை) காலை 6.30 மணிக்கு,புனித தோமையர் மலை வடக்கு ஒன்றிய த்திற்கு உட்பட்ட, முடிச்சூர் ஊராட்சியில், முடிச்சூர் ரோடு, பார்வதி நகர்,இருந்து தொடங்கி சக்தி நகர், இந்திரா நகர், அமுதம் நகர்,கொம்மி அம் மன் நகர்,மேற்கு கிழக்கு லட்சுமி நகர்,வழியாக சென்று கடைசியாக முடிச் சூர் பேருந்து நிலையம்,(சிஎஸ்ஐ தேவா லயம்)அருகில் முடிவு பெறும்,

அதன் பிறகு,மாலை 4 மணியளவில்,தாம்பரம் மாநகரம், பெருங்களத்தூர் வடக்கு பகுதி,54 வட்டத் தில்,சாய் நகர், சர்வீஸ் சாலையில் தொடங்கி, சிடிஓ காலனி,வள்ளலார் கோவில், ஹரிதா என் கிள வுஸ், கே.ஆர்.சி நகர், மூகாம்பிகை நகர், பாரதி தாசன் நகர், புடிச்ச அவ ரோடு கன்னியம்மன் கோவில், வெற்றி நகர், கிருஷ்ணா நகர், 53,60 உள் ளடக்கிய தெருக்களில் 49 வட்டத்தில்,உள்ள, தெருக் கல்,வழியாக,மேற்கு தாம்ப ரம்,சண்முகம் சாலை பார திதிடலில், நிறைவு பெறுகிறது, மேல் சொன்ன,முக்கிய. வீதிகள் வழியாக, வாகனப் பிரச்சா ரத்தில், ஊர்வலமாக சென்று வாக்குகள் சேகரிக் கிறார்.

மேற்படி நிகழ்ச்சிகளில் தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ் ஆர் ராஜா எம்எல்ஏ முடிச்சு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அ.விநாயகமூர்த்தி, மாநகர மேயர், க.வசந்த குமாரி,துணை மேயர் கோ.காமராஜ், தொகுதி பார்வையாளர்கள் என். மருது கணேஷ், பரிதிஇளம் சுருதி, மற்றும் மதச்சார் பற்ற முற்போக்கு, கூட்ட ணிக் கட்சிகளின் நிர்வாகி கள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்,பகுதி கழக நிர் வாகிகள்,வட்டக் கழகச் செயலாளர்கள், நாம் ஒன்று உறுப்பினர்கள், நிர் வாகிகள், இளைஞர் அணி,மாணவர் அணி, மக ளிர் அணி,உள்ளிட்ட மா வ ட் ட ம், ம ா ந க ர, பகுதி,வட்ட கழக, அனை த்து அணிகளின் அமைப்பா ளர்கள், துணை அமைப்பா ளர்கள், கழக தோழர்கள், பொதுமக்கள், அனைவரும் இருசக்கர வாகனங்க ளில்,கழக கொடிகள்,உட் பட கூட்டணி கட்சிகள் கொடிகளுடன், அணிவ குத்து, தவறாமல் கலந்து கொண்டு,நிகழ்ச்சியினை, சிறப்பிக்க வேண்டுமாய்.

ஒன்றிய பகுதி கழக செயலாளர்கள், டி.காம ராஜ் ஜி.கே.ரவி ஆகிய,இரு வரும் தனது அறிக்கையில், கேட்டுக் கொண்டுள்ளனர்.

சைதாப்பேட்டை ஈக்காட்டுத்தாங்கலில் – கழக வேட்பாளர்

மா.சுப்பிரமணியனை ஆதரித்து கி.வீரமணி சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை,ஏப்.15-

மதசார்பற்ற முற்போக் குக் கூட்டணி சைதாப் பேட்டை சட்டமன்றத் தொகுதி தி.மு.கழக வேட் பாளர் மா.சுப்பிரமணியன் அவர்களை ஆதரித்து திரா விடர் கழக தலைவர் ஆசிரி யர் கி.வீரமணி அவர்கள் இன்று (15-4-2026) ஈக்காட் டுத்தாங்கல் பூவிருந்தவல்லி சாலையில் வாக்குச் சேகரித்து சிறப்புரையாற்று கிறார்.

ஆகவே இந்தப் பொதுக் கூட்டத்தில் தி.மு.கழக நிர் வாகிகள், தொண்டர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் பங்கேற்று சிறப் பித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திராவிட முன்னேற்றக் கழக வெற்றி வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா நெசப்பாக்கம் கானு நகர், பாரதியார் நகர், பொன்னம்பலம் நகர், துளசி அம்மன் நகர், கிருஷ்ணன் நகர் பகுதியிலும், மாலை சூளைப்பள்ளம் அங்காள பரமேஸ்வரி கோவில் தெரு, மயிலை சிவமுத்து கோவில் தெரு, சுரேந்திரன் தெரு, சஞ்சய் காந்தி காலனி துர்க்கை அம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தார். உடன் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்

மா.சுப்பிரமணியன் 170 'அ' வட்டத்தில் பிரச்சாரம்!

பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் அறிக்கை!

சென்னை,ஏப்.15-

மதசார்பற்ற முற் போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்ட மன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.சுப்பிர மணியன் அவர்கள் நாளை (16-4-2026) வியா ழக்கிழமை 170 (அ) வட்டத்தில் காலை 7 மணி முதல் வீதி, வீதியாக சென்று பொதுமக்களி டம் வாக்குச் சேகரிக்கி றார்.

அதன் விவரம் வரு மாறு:

170 அ வட்டம்

காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை

காலை 7 மணிக்கு கழிக்குன்றம் பகுதி அம் பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து பிரச்சாரம் தொடக்கம், கழிக்குன் றம் அண்ணா தெரு, திரு வீதி அம்மன் கோயில் 1, 2, 3 தெருக்கள், அண்ணா தெரு, பிள்ளையார் கோயில் 1,2,3 தெரு, கழிக்குன்றம் 1வது, 2வது தெரு, கழிகுன்றம் பிர தான சாலை, பள்ளி பட்டு கந்தசாமி தெரு, பஜனை கோயில் தெரு, புது தெரு, யோகி கார் டன், ஸ்ரீராம் நகர் மெயின்ரோடு, ஸ்ரீராம் நகர் 1 முதல் 6 தெருக் கள், சி.எல்.ஆர்.ஐ குடியி ருப்பு, மேற்கு கால்வாய் கரை சாலை, பாரதிஅவன்யூ 1 முதல் 3 தெருக்கள், மாந்தோப்பு, மண்டபம் சாலை, பீலி யம்மன் கோயில் தெரு, பெருமாள் கோயில் தெரு, குருவப்பன் தெரு, ஜிப்ஸி காலனி, சத்யா நகர், ஏரிக்கரை சாலை வழியாக எல்லையம்மன் கோயில் தெரு, ஆர்.எஸ். ஸ்ரீதர் சாலை, பெருமாள் கோயில் தெரு வழியாக பெருமாள் கோயில் சந்து, கிழக்கு எல்லையம் மன் கோயில் தெரு, லாக் தெரு, மேற்கு கால்வாய் கரை சாலை வழியாக அங்காளம்மன் கோயில் தெரு, பாரதிஅவென்யூ வில் வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சி இரவு 9 மணி வரை நடைபெறும்.

இவ்வாறு இரா. துரைராஜ் தெரிவித்துள் ளார்.

திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் வி.ஜி. ராஜேந்திரனை ஆதரித்து, திருவள்ளூர் மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் சித்திக் அலி ஏற்பாட்டில் கடம்பத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் ஏ. பிரகாஷ் ஞானஒளி முன்னிலையில் கடம்பத்தூர் புனித மத்தேயு ஆலயத்தில் கழக அரசு கிறிஸ்தவ பெருமக்களுக்கு செய்துள்ள சாதனைகளை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். உடன் மாநில தொண்டர் அணி துணை செயலாளர் குருதாஸ், துணை அமைப்பாளர்கள் பெருமாள்,ரஹிம், மத்தூர் பன்னீர்செல்வம் பிரசன்ன குமார், சேகர், தமிழ்செல்வன், மாலதி வாசன், குமரேசன் ஒன்றிய நிர்வாகிகள் வி.ராஜசேகர், மெய்யழகன், உள்பட பலர் உள்ளனர்.

கழக வேட்பாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி சிந்தாதிரிப்பேட்டை காக்ஸ் காலனி பகுதியில் ஜீப் பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.மதன்மோகன், தொகுதி பார்வையாளர் பி.கே.பாபு, வட்டக் கழகச் செயலாளர் ஆர்.ஜெகதீசன், கே.மகேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பி.பாலசந்தர், பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஜி.ஜெ.கிரிதரன், பகுதி துணைச் செயலாளர் இளையராஜா, எஸ்.கே. ராஜ் மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வில்லிவாக்கம் சட்டமன்ற வேட்பாளர் கார்த்திக் மோகனை ஆதரித்து வில்லிவாக்கம் பகுதியில் சென்னை வடக்கு திட்ட மின் கழக தொ.மு.ச. சார்பில் மாநில (மு) தலைவர் சென்னை வடக்கு திட்ட செயலாளர் கே.சசிகுமார் மற்றும் நிர்வாகிகள் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர். இதில் பகுதி செயலாளர் கூ.பி.ஜெயின், மின் கழக தொமுச மூத்த முன்னோடிகள் வி.கோவிந்தன்,க.செல்வராஜ் மின்வாரிய ஓய்வு பெற்ற மின்வாரிய தொமுச திட்ட செயலாளர் ஏ.எல்.சங்கர், தியாகு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து உதயசூரியனுக்கு வாக்கு சேகரிப்பு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, 122 வது வட்ட செயலாளர் ராஜா சுரேஷ், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.சரவணன் அறிவுறுத்தலின்படி மயிலை மேற்கு பகுதி தி.மு.க மாணவர் அணி சார்பில் நேற்று (14.4.2026) 122 வது வட்டம் முழுவதும் வீடு வீடாக சென்று பிரச்சாரம் நடைபெற்றது. இதில் மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் நந்தனம் மு.சதீஷ், மாணவர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள் பாஸ்கர் மணிகண்டன், அருண்குமார், சங்கர், கார்த்தி, வீரராகவன், மாணவர் அணி நிர்வாகி ராஜா, ராஜேஷ் ஆகியோர் மற்றும் கல்லூரி மாணவர்கள், மயிலை மேற்கு பகுதி மாணவர் அணி மற்றும் கழக செயல் வீரர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். இதில் மயிலை மேற்கு பகுதி மாணவரணி அமைப்பாளர் ஆர்.ராமு நன்றி கூறினார்.